# The Contribution of Myths to Wellbeing from the Perspective of Existential Counselling: A Hermeneutic Study

*Marimuthu Prahasan*[1]
EMAIL: prahasankm@esn.ac.lk
ORCID: https://orcid.org/0009-0008-3069-9816

**Abstract**

This article examines how myths function as resources of *meaning-making* in the modern world from the perspective of existential empowerment (existential counselling). A common view prevails that myths have lost relevance in a contemporary age dominated by science, rationality, and technological modes of life. This study emphasizes that myths operate as symbolic "maps of the psyche" that guide individuals in confronting fundamental problems of human existence such as loneliness, alienation, meaninglessness, and awareness of death. As its theoretical foundation, the study employs Rollo May's approach to finding meaning in myths, along with Carl Jung's theory that understands myths as archetypal expressions of the collective unconscious. Methodologically, the *Sundarakāṇḍa* text is approached through content analysis and hermeneutic reading. The study explains how episodes such as Hanuman's leap across the ocean, his confrontation of obstacles, his dialogue with Sita, and his return foreground themes of hope, courage, responsibility, affirmation of self-identity, and resilience. Furthermore, the intellectual tradition that uses Indian epics as resources for psychological empowerment confirms that this approach is not merely an innovation but rather a continuation of an interdisciplinary tradition linking myth, meaning, and psychology. Through this, the article argues that the *Sundarakāṇḍa* can be employed as an existential empowerment resource that transforms the modern individual's existential anxiety into meaningful wellbeing.

***Keywords:*** *Sundarakāṇḍa, Myth, Psychological Empowerment, Existentialism, Rollo May*

[1] Senior Lecturer in Philosophy, Dept. of Philosophy and Value Studies, Faculty of Arts and Culture, Eastern University Sri Lanka

# இருத்தலிய ஆற்றுப்படுத்தல் நோக்கில் நல்வாழ்க்கைக்கு புராணங்களின் பங்களிப்பு: ஒரு வியாக்யானவியல் ஆய்வு

**அறிமுகம்**

மனித நடத்தையை வழிநடத்தும் ஒழுக்க கட்டமைப்புகளை விளக்குகின்ற கதைகள் ஊடாக புராணங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. கிரேக்கத்தில் ஹோமரின் காவியக் கதைகள் முதல் இந்தியாவில் மகாபாரதம் மற்றும் இராமாயணம்; வரை புராணங்கள் காலத்தையும் புவியியல் எல்லைகளையும் கடந்து மனிதகுலத்தின் கூட்டு நனவில் பதிந்து இயக்குகின்றன. அறிவியல் பகுத்தறிவும் தொழில்நுட்ப முன்னேற்றங்களும் ஆதிக்கம் செலுத்தும் ஒரு காலத்தில் புராணங்கள் அவற்றின் பொருத்தத்தை, முக்கியத்துவத்தை இழந்துவிட்டதாக கருதிக்கொள்ள முடியும். இருப்பினும் அவை சமகால சமூகத்தில் ஆழமாக எதிரொலிக்கின்றன என்பது மறுப்பதற்கில்லை. கடந்த காலத்தின் காலாவதியான நினைவுச்சின்னங்களாக அல்லாமல் மனித இருப்புடன் தொடர்புடைய இன்றியமையாத கேள்விகளுக்கு பதில் வழங்கும் உயிரோட்டமுடைய வழிகாட்டல்களாக அவை தொடர்கின்றன (Shamasundar, 1993: 449; Campbell, Moyers, 1988:13). இவ்வாறு புராணங்கள் குறியீட்டு மொழியின் மூலம் பொதுவான உண்மைகளை தனிமனிதனுக்கு பொருத்தி வெளிப்படுத்தும் தன்மையினை பகுப்பாய்வுக்குள்ளாக்கி புரிந்துகொள்வதன் ஊடாக அவற்றினை சமகால சமூகத்திற்கு பிரயோகிக்கும் வாய்ப்பு உள்ளது.

உளவியலாளர் கார்ல் யுங் புராணங்கள் "கூட்டு நனவிலியின்" வெளிப்பாடுகள் என்று குறிப்பிட்டுள்ளார் (Jung, 1950: 76). இது பல்வேறு காலகட்டங்களில் மாறுபட்ட கலாசாரங்களில் பகிர்ந்துகொள்ளப்பட்ட பொதுவான கருத்துக்கள், குறியீடுகளின் தொகுப்பாகும். ஞானிகள், வீரர்கள், தாய்மை, காதல், வீரம், மனவுறுதி, விசுவாசம், துரோகிகள் என பல்வேறு மனிதர்களது அடிப்படை அனுபவங்கள் இங்கு பிரதிபலிக்கின்றன. இதனூடாக மனிதர்கள் தங்களது அடையாளம், நோக்கம், சார்புத்தன்மை போன்ற உணர்வுகளை பிரதிபலிக்கின்றனர். பல்வேறு காரணங்களின் அடிப்படையிலான மாறுபாடுகள், அந்நியப்படுதல் மற்றும் இருத்தலியல் நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றால் அதிகரித்து வரும் இடப்பாடுகளுக்கு மத்தியில் புராணங்கள் பாரம்பரியத்துடனான தொடர்ச்சி மற்றும் இணைப்பின் உணர்வை வழங்குபவையாக உள்ளன, கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும், தனிநபருக்கும் சமூகத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கின்றன. இந்திய கலாசாரத்தில் மிகவும் மதிக்கப்படும் காவியங்களில் ஒன்றான ராமாயணம், புராணத்தின் காலத்தால் அழியாத சக்தியை எடுத்துக்காட்டுகிறது (Wig, 2004: 26; Oswal, 2012: 292). வால்மீகி முனிவரால் இயற்றப்பட்ட இது கடவுள் விஷ்ணுவின் அவதாரமான ராமரின் வாழ்க்கையையும், அரக்க மன்னன் என்று விபரிக்கப்படும் இராவணனிடமிருந்து தனது மனைவி சீதையை மீட்பதற்கான அவரது தேடலையும் விவரிக்கிறது. இந்தக் காவியம் தெய்வீக தலையீடு மற்றும் வீரச் செயல்களின் கதை மட்டுமல்லாது தர்மம் (நீதி), பக்தி, விசுவாசம், முயற்சி மற்றும் மேலும் பல மனித நிலைகள் பற்றிய ஆழமான உள்ளடக்கமாகும். கி.மு ஆறாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டுள்ள ராமாயணம் உலகம் முழுவதும் மில்லியன் கணக்கான மக்களை தொடர்ந்து ஊக்கப்படுத்தி வருகிறது, அதன் கருப்பொருள்கள் மற்றும் கதாபாத்திரங்கள் சமகால மக்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கின்றன. உளஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளில் இதன் பொருண்மைகள் பிரயோகிக்கப்பட முடியும் என்று வலியுறுத்தப்படுகின்றது (Jacob, Krishna, 2003: 201; Kurhade etc. all, 2024:14).

இராமாயணத்தின் ஏழு புத்தகங்களில் (காண்டங்கள்) சுந்தரகாண்டம் ஒரு தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது. பெரும்பாலும் "அழகான அத்தியாயம்" என்று விவரிக்கப்படும் இது காவியத்தின் கதை மற்றும் ஆன்மீக மையப் பகுதியாகும். சுந்தரகாண்டம் இராமரின் அர்ப்பணிப்புள்ள ஊழியரும் வலிமை, ஞானம் மற்றும் பக்தியின் உருவகமான அனுமனை மையமாகக் கொண்டுள்ளது. இது அனுமனின் இலங்கைப் பயணத்தை விவரிக்கிறது, அங்கு அவர் சீதையைக் கண்டுபிடித்து, இராமரின் உடனடி மீட்பை அவளுக்கு உறுதியளிக்கிறார், மேலும் காவியத்தின் உச்சக்கட்டப் போருக்கு ஆரம்பத்தை ஏற்படுத்துகின்றார், இராமனிடம் திரும்பி சீதைகளை கண்டறிந்து செய்தியை தெரிவிக்கின்றார். சுந்தரகாண்டம் மனித அனுபவத்துடன் ஆழமாக எதிரொலிக்கும் கருப்பொருள்களால் நிறைந்துள்ளது. அனுமனின் பயணம் வெறும் உடல் ரீதியான தேடல் மட்டுமல்ல, நம்பிக்கை, தைரியம் மற்றும் மீள்எழுச்சித்திறன் ஆகியவற்றின் உருவக வெளிப்பாடாகும். இலங்கையை அடைய அவர் கடலைக் கடந்து குதித்தது விரக்தியின் மீதான உறுதியின் வெற்றியைக் குறிக்கிறது, அதே நேரத்தில் சூரசை என்ற அரக்கி மற்றும் காவல்தேவதை இலங்கினி போன்ற பல்வேறு தடைகளை அவர் சந்திப்பது, சீதையை தேடி கண்டறிவது முதலானவை அர்த்தத்தைத் தேடுவதில் தனிநபர்கள் எதிர்கொள்ளும் உள் மற்றும் வெளிப்புற சவால்களை பிரதிபலிக்கிறது. இராமர் மற்றும் சீதை மீதான அனுமனின் அசைக்க முடியாத பக்தி நம்பிக்கை மற்றும் விசுவாசத்தின் சக்தியை எடுத்துக்காட்டுகிறது. இவை வாழ்க்கையின் சிக்கல்களை கருணை, நம்பிக்கை மற்றும் நேர்மையுடன் எதிர்கொண்டு வெற்றிபெறுவதற்கான ஒரு மாதிரியை வழங்குகிறது.

மேலும், சுந்தரகாண்டம் நம்பிக்கை மற்றும் புதுப்பித்தல் உணர்வால் நிறைந்துள்ளது. அசோக வனத்தில் சீதையை அனுமன் கண்டுபிடித்தது, துன்பங்களை எதிர்கொண்டதில் அவளது மீள்தன்மை, அவள் இருக்கும் இடம் பற்றிய செய்திகளுடன் இராமரிடம் அவர் வெற்றிகரமாகத் திரும்பியது ஆகியவை அனைத்தும் எழுச்சியூட்டவும் ஊக்கமளிக்கவும் உதவுகின்றன. நிச்சயமற்ற தன்மை மற்றும் துன்பத்தால் சூழப்பட்ட நிலையில் சீதை தன்னுடைய துணைவனுக்காக உறுதியான மனநிலையுடன் காத்திருப்பது என சுந்தரகாண்டம் பக்தி, தைரியம் மற்றும் அன்பின் நீடித்த சக்தியை வெளிப்படுத்துகிறது. ஆழமான கருப்பொருள்கள் மற்றும் காலத்தால் அழியாத பொருத்தத்தின் கலவையே சுந்தரகாண்டத்தை நவீன உளவியல் தேவைகளை நிவர்த்தி செய்வதில் புராணத்தின் பங்கை ஆராய்வதற்கான ஒரு சிறந்த பாடமாக ஆக்குகிறது.

சுந்தரகாண்டத்தின் உளவியல் முக்கியத்துவத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள, இருத்தலியல் உளவியலில் முன்னணி பங்களிப்பாளர்களில் ஒருவரான றோலோ மேயின் கோட்பாடுகளுடன் இணைத்து நோக்குவது பயனுடையதாக உள்ளது. மேயின் படைப்புகள் தொன்ம ஆய்வுக்கு மிகவும் பொருத்தமானவை, ஏனெனில் அவர் தொன்மங்களை மனித நிலையைப் புரிந்துகொள்வதற்கும் இருத்தலியல் கவலைகளை நிவர்த்தி செய்வதற்கும் அவசியமான கருவிகளாகக் கருதினார். மேயின் இருத்தலியல் உளவியலின் மையத்தில் "இருத்தலியல் பதகளிப்பு" என்ற விடயம் உள்ளடங்கியுள்ளது. இது ஒருவரின் சுதந்திரம், பொறுப்பு மற்றும் இறப்பு பற்றிய விழிப்புணர்விலிருந்து எழும் ஒரு அடிப்படை அமைதியின்மை என்று புரிந்துகொள்ளப்பட முடியும். பலவீனப்படுத்தும் நோயியல் பதகளிப்பு போலல்லாமல், இருத்தலியல் பதகளிப்பு மனித அனுபவத்தின் உள்ளார்ந்த பகுதியாகும். இந்த பதகளிப்பை எதிர்கொள்வது தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் சுய-உணர்தலுக்கு அவசியம் என்று மே வாதிடுகின்றார். இருப்பினும் நவீன சமுதாயத்தில், தனிநபர்கள் பெரும்பாலும் இருத்தலியல் பதகளிப்பை

*தவிர்க்க அல்லது அடக்க முயற்சி செய்கிறார்கள், இது அர்த்தமற்ற தன்மை மற்றும் அந்நியப்படுதலின் உணர்வுக்கு வழிவகுக்கிறது என்பது றோல்லோ மேயின் கருத்தாக உள்ளது.*

*மே தனது 'புராணங்களுக்கான தேடல்'* (The Cry for Myth) *என்ற புத்தகத்தில் புராணங்கள் மனிதர்கள் தங்களது இருப்பைப் புரிந்துகொள்வதற்கான ஒரு கட்டமைப்பை வழங்குகின்றன என்றும், வாழ்க்கை, இறப்பு மற்றும் நோக்கம் பற்றிய உலகளாவிய கேள்விகளுக்கு பதில்களை வழங்குபவையாக உள்ளன என்றும் கூறுகிறார் (பிரகாஷன், 2025: 289). புராணங்கள வெறும் கதைகள் அல்ல அவை அலட்சியமாகத் தோன்றும் பிரபஞ்சத்தில் அர்த்தத்தைக் கண்டறியும் மனித போராட்டத்தின் குறியீட்டு வெளிப்பாடுகளாகும். புராணங்களுடன் தொடர்புபடுவதன் மூலம், தனிநபர்கள் தங்கள் இருத்தலியல் கவலைகளை எதிர்கொள்ள முடியும், பகிரப்பட்ட கதைகளில் ஆறுதல் காணவும், அடையாளம் மற்றும் நோக்கத்தின் ஆழமான உணர்வை வளர்த்துக் கொள்ளவும் முடியும். மேலும் உள ஆரோக்கியத்தை வளர்ப்பதில் 'புராண குறியீடுகளின்' முக்கியத்துவத்தையும் இவர் வலியுறுத்தினார். கூட்டு நனவிலியிலிருந்து வெளிப்படும் இந்த குறியீடுகள், நனவு மற்றும் நனவிலி மனதிற்கு இடையே பாலங்களாகச் செயல்படுகின்றன, இதனால் தனிநபர்கள் தங்கள் ஆன்மாவின் பல்வேறு அம்சங்களை ஒருங்கிணைக்க முடியும். உதாரணமாக அனுமன் போன்ற நபர்களால் உருவகப்படுத்தப்பட்ட வெற்றிவீரனின் முன்மாதிரி, தைரியம், மீள்தன்மை மற்றும் சுயம் கடந்தநிலைக்கான மனித திறனைக் குறிக்கிறது. அத்தகைய முன்மாதிரிகளுடன் மனிதர்கள் தங்களை அடையாளம் காண்பதன் மூலம், வலிமையையும் உத்வேகத்தையும் பெறலாம், அவர்களின் இருத்தலியல் கவலைகளை படைப்பாற்றல் மற்றும் வளர்ச்சியின் ஆதாரங்களாக மாற்றலாம் என்பது றோல்லோ மேயின் வாதமாக உள்ளது.*

**ஆய்வுப் பிரச்சினை**

*நவீன உலகில் தனிமை, அந்நியமாதல், அர்த்தமின்மை உணர்வு மற்றும் இருப்பியல் பதகளிப்பு போன்ற உளவியல் சிக்கல்கள் மனித நல்வாழ்வை பாதிக்கின்றன. அறிவியல்-பகுத்தறிவு மையப்படுத்தப்பட்ட வாழ்வியல் மனிதனின் பொருள் சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்தாலும், அகநிலை கேள்விகளுக்கு போதுமான பதிலை வழங்குவதாக இல்லை. இதேவேளை, சுந்தரகாண்டம் போன்ற புராணக் கதைவடிவங்கள் மனித இருப்பின் அடிப்படைச் சவால்களை பிரதிபலிக்கும் திறனை உடையதாகக் கருதப்படுகின்றன. எனினும், இவ்வாறான புராண வளங்கள் நவீன இருத்தலிய ஆற்றுப்படுத்தலில் நடைமுறை உளவியல் கருவிகளாக முறையாக பயன்படுத்தப்பட முடியுமா என்பதில் தெளிவான விளக்கம் இன்னும் போதுமான அளவில் நிறுவப்படவில்லை. ஆகவே, சுந்தரகாண்டத்தின் குறியீட்டு-கருப்பொருள் அமைப்புகள் றோல்லோ மேயின் இருத்தலிய உளவியல் கோட்பாடுகளுடன் ஒப்புநோக்கப்படும்போது, அவை அர்த்த உருவாக்கம், பதகளிப்பு மேலாண்மை, சுய-அடையாளத்தை உறுதிப்படுத்தல், மற்றும் பொறுப்புணர்வின் வளர்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்கும் ஆற்றுப்படுத்தல் வளங்களாக செயல்படுத்தப்பட முடியுமா? என்பது இந்த ஆய்வினை மேற்கொள்வதற்குரிய பிரச்சினையாக உள்ளது.*

**ஆய்வு வினாக்கள்**

*இந்த ஆய்வு கீழ்க்கண்ட முக்கியமான கேள்விகளுக்கான விடைகளை காண்பதற்கு முன்னுரிமையளிக்கின்றது.*

- *சுந்தரகாண்டத்தில் அனுமனின் பயணம், மனிதர்கள் எதிர்கொள்ளும் இருப்பியல் சவால்களையும், கவலைகளையும் எதிர்கொள்வதற்கும், அர்த்தத்தைக் கண்டுபிடிக்கும் போராட்டத்திற்கும் எவ்வாறு பிரயோகிக்கத்தக்கதாகவுள்ளது?*

- *சுந்தரகாண்டத்தில் இருக்கும் நம்பிக்கை, தைரியம் மற்றும் மன உறுதிப்பாடு போன்ற கருப்பொருள்கள், றோல்லோ மேயின் இருப்பியல் ஆரோக்கியம் மற்றும் சுயம்-கடந்தநிலை முதலான கோட்பாடுகளோடு எவ்வாறு இசைவுடையதாக உள்ளது?*
- *தனிமை, கவலை மற்றும் வாழ்க்கையின் பொருள் தேடுதல் போன்ற சிக்கல்களை எதிர்கொள்ளும் நவீன மனிதனுக்கு உளவியல் ஆதாரமாக சுந்தரகாண்டம் எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும்?*

**ஆய்வு நோக்கங்கள்**

*இந்த ஆய்வு பின்வரும் பிரதான நோக்கங்களைக் கொண்டுள்ளது.*

- *சுந்தரகாண்டம் போன்ற புராண கூறுகள் வெறும் கலாசார மரபுகளாக மட்டுமல்லாமல், நவீன வாழ்க்கையின் சிக்கல்களை திறம்பட வழிநடத்தக் கூடிய உளவியல் கருவிகளாகவும் விளங்குகின்றன என்பதை நிறுவுதல்.*
- *புராணவியலுக்கும் உளவியலுக்கும், புராணத்திற்கும் சமகாலத்திற்கும் இடையில் இணைப்பை ஏற்படுத்துவதன் ஊடாக மனிதர்கள் தங்களின் வாழ்க்கைப் பயணத்திற்குத் தேவையான வழிகாட்டுதல், ஊக்கம், மற்றும் புதுப்பித்த அர்த்த உணர்வைப் பெறுவதற்கு முடியும் என்பதனை வலியுறுத்துதல்.*

**இலக்கிய மீளாய்வு**

*புராணங்களை மனித இருப்பின் அர்த்த அமைப்புகளாக அணுகும் கோட்பாட்டு மரபு மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய உளவியல்-மெய்யியல் ஆய்வுகளில் உறுதியாக நிறுவப்பட்டுள்ளது. இருத்தலிய உளவியலாளர் றோல்லோ மே புராணங்களை மனிதன் வாழ்க்கையின் நோக்கம், சுதந்திரம், பொறுப்பு, மரணம் போன்ற அடிப்படை இருப்பியல் உண்மைகளைப் புரிந்துகொள்ள உதவும் குறியீட்டு அமைப்புகளாக விளக்குகிறார்; அவரது பார்வையில் புராணங்கள் தனிநபரின் பதகளிப்பை அர்த்தமாக மாற்றும் மனஅமைப்பு வரைபடங்களாக செயல்படுகின்றன (பிரகாசன்,* 2025: 289). *இதனை ஒத்த நிலையில் கால் யுங் புராணங்களை கூட்டு நனவிலியின் முன்மாதிரி (archetypal) வெளிப்பாடுகளாகக் கருதி வீரன், தாய் போன்ற பொதுவான மனவடிவங்கள் மனித உளத்தின் அடிப்படை இயக்கங்களை பிரதிபலிக்கின்றன என்று வாதிடுகிறார்* (Jung, 1950). *மேலும் ஜோசப் கம்பெல் உலகப் புராணங்களில் காணப்படும் "நாயகப் பயணம்" வடிவமைப்பு மனித வாழ்க்கையின் உளவியல் மாற்றப் பயணத்தை பிரதிபலிக்கின்றது என்பதை ஆய்வுகள் மூலம் நிறுவுகிறார்* (Campbell, 1949). *இந்த மூன்று அணுகுமுறைகளும் புராணங்களை சமயக் கதைகள் என்ற நிலையைத் தாண்டி இருத்தலிய-உளவியல் அர்த்த முறையியல்களாக புரிந்துகொள்ள வேண்டியதைக் கோட்பாட்டளவில் உறுதிப்படுத்துகின்றன.*

*பிரகாசன் (2023) எழுதிய* Features of Individual Counselling in the Bhagavat Gita - A Philosophical Perspective *எனும் ஆய்வுக் கட்டுரை பகவத்கீதையில் இடம்பெறும் உளஆற்றுப்படுத்தலம் அம்சங்கள் தொடர்பான தெளிவான விளக்கங்களை முன்வைப்பதாக உள்ளது. இதில் அர்ச்சுனனுக்கு மனக்குழப்பம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் எவ்வாறு கிருஷ்ணர் ஆற்றுப்படுத்தலை மேற்கொண்டார் என்பது கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக ஒரு சேவைநாடியாக அர்ச்சுனனும் சேவை வழங்குநராக கிருஷ்ணரும் அணுகப்பட்டுள்ளனர். இதன் முடிவில் பொருத்தமான விளைவு எவ்வாறு பெறப்பட்டது என்பது சுட்டிக்காட்டப்பட்டு ஆற்றுப்படுத்தல் செயல்முறைக்கு ஒரு ஆன்மீக முன்னோடியாக பகவத்கீதை உள்ளமை நிறுவப்பட்டுள்ளது.* Reddy (2012) *எழுதிய* Psychotherapy – Insights from Bhagavad Gita

எனும் ஆய்வுக் கட்டுரை மகாத்மா காந்தி பகவத்கீதையில் இருந்து தன்னுடைய வாழ்க்கையின் சிக்கலான சந்தர்ப்பங்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொண்டதாக சுட்டிக்காட்டுகின்றது. அத்துடன் உளவியல் மாணவர்கள் வாழ்க்கையில் முரண்பாடுகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குரிய ஆழமான வழிகாட்டல்கள் இதில் உள்ளமை வலியுறுத்தப்படுகின்றது. மேலும் பிரச்சினையினை அடையாளப்படுத்துவதற்கும், தீர்வினை நோக்கி நகர்வதற்குரிய உரிய ஆற்றுப்படுத்தல் நுட்பங்களை இதில் பெற்றுக்கொள்ள முடியும் என்று குறிப்பிடுகின்றது.

Balaji Deekshitule (2017) எழுதிய Effects of Indian Epics in Psychotherapy எனும் ஆய்வுக் கட்டுரை பகவத்கீதை, இராமாயணம், மகாபாரதம், வேதங்கள் என்பவற்றில் ஆற்றுப்படுத்தல் மூலங்கள் எவ்வாறு உள்ளன என்பதனை ஆய்வு செய்து வெளிப்படுத்துகின்றது. குறிப்பாக மனஅழுத்தத்தை சமாளித்தல், பிரச்சினைகளை தீர்த்தல், உறவுகளை பேணுவதில் வெற்றிகரமாக செயற்படுதல் என்பவற்றுக்காக தாராளமான வழிகாட்டல்கள் உள்ளமை சுட்டிக்காட்டப்படுகின்றது. இவற்றினை கற்றுக்கொள்வதானது வெற்றிகரமான உளஆற்றுப்படுத்தலை மேற்கொள்வதற்குரிய நுண்ணறிவை வழங்கும் என்பது இவ் ஆய்வுக்கட்டுரை வலியுறுத்தும் விடயமாக உள்ளது.

Gairola, Mishra (2022) எழுதிய Bhagavad Gita and Psychotherapy: A Cure for Soul எனும் ஆய்வுக் கட்டுரை பகவத் கீதை வேத–உபநிடத சிந்தனைகளின் சாரமாக மட்டுமன்றி மனித இருப்பின் உளவியல் மற்றும் இருத்தலியல் பரிமாணங்களை விளக்கும் உரையாகவும் பல ஆய்வாளர்களால் வாசிக்கப்பட்டுள்ளமையினை சுட்டிக்காட்டுகின்றது. சமகால உளவியல் இலக்கியத்தில், அர்ஜுனனின் நெருக்கடி அனுபவம் இருத்தலிய பதற்றம், ஒழுக்க முரண்பாடு, அடையாளக் குழப்பம் போன்ற நிலைகளின் குறியீட்டு வடிவமாகவும், கிருஷ்ணரின் வழிகாட்டுதல் அர்த்தமீள்கட்டமைப்பு, அறிகை மீளுருவாக்கம் ஆகிய சிகிச்சைச் செயல்முறைகளின் மாதிரியாகவும் விளக்கப்படுகிறது. இதனால் கீதை சிகிச்சையாளர்–நோயாளி உரையாடல் வடிவத்தை முன்கூட்டியே சித்தரிக்கும் உரையாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. இந்த அணுகுமுறை கீதையின் கடமை, பற்றின்மை, சுயஅறிதல், செயல்-பொறுப்பு போன்ற கருத்துக்கள் மனித நடத்தை மற்றும் உளவியல் மாற்ற இயக்கவியலுடன் தொடர்புபடுத்தப்பட முடியும் என்பதைக் காட்டுகிறது. ஆகவே கீதையை உளவியல்-இருத்தலியல் வளமாகப் பயன்படுத்தும் ஆய்வுகள் தனிப்பட்ட விளக்க முயற்சிகள் அல்ல, மாறாக புராண-இதிகாச உரைகளை நவீன உளவியல் மற்றும் நல்வாழ்வு ஆய்வுகளுடன் இணைக்கும்; தொடர்ச்சியாகக் கருதப்படுகின்றன

இவ்வாறு புராணங்களை உளஆற்றுப்படுத்தல் நோக்கில் ஆய்வுக்குள்ளாக்கிய கட்டுரைகள் பெரும்பாலும் பகவத்கீதையினை அதிகளவில் பயன்படுத்தியுள்ளமையினை கண்டறிய முடிகின்றது. இந்த ஆய்வு அதேபோன்றதொரு கவனத்தை இராமாயணத்தில் இடம்பெறும் சுந்தரகாண்டம் பகுதியில் செலுத்துவதன் ஊடாக தனித்துவமானதாகவும், முக்கியமானதாகவும் அமைகின்றது.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வின் முதன்மை நோக்கம் சுந்தரகாண்டத்தை றோல்லோ மேயின் பன்முகமான இருத்தலிய உளவியலின் நோக்கில் பகுப்பாய்வு செய்வது ஆகும். குறிப்பாக, சமகாலத்தில் உளவியல்; தேவைகளுக்கு எவ்வாறு இந்த புராணம் பங்களிப்பு செய்யக்கூடியதாகவுள்ளது என்பதைக் கண்டறிவதே ஆய்வின் கோட்பாட்டுப் பின்புலமாகும். சுந்தரகாண்டத்தின் முக்கியமான கருப்பொருள்கள், பாத்திரங்கள் மற்றும்

குறியீடுகளை றோல்லோ மேயின் கோட்பாடுகளின் வழிகாட்டலில் ஆராய்வதன் மூலம், புராணக் கதைகளின் நிலையான சிறப்பையும் அவற்றின் இன்றைய சமூகத்திற்கு உள்ளார்ந்த முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகவுள்ளது. இதன்பொருட்டு சுந்தரகாண்ட பாடல்கள், விளக்கவுரைகள் குறித்து உள்ளடக்க பகுப்பாய்வு முறை பிரயோகிக்கப்பட்டுள்ளது. மேலும் தோற்றப்பாட்டியல், இருப்பியல் மெய்யியலாளர் மார்ட்டின் ஹைடேகரினால் விருத்தி செய்யப்பட்ட வியாக்யானவியல் ஆய்வு *(Interpretive Phenomenology)* முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுடன் வரலாற்று அணுகுமுறை, விமர்சன நோக்கு என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**கோட்பாட்டுக் கட்டமைப்பு**

இராமாயணம் பொதுவாக காவியம் என்ற வரையறைக்குள் உள்ளடக்கப்படுகின்றது எனினும் புராணங்களுக்குரிய பண்புகளையும் கொண்டுள்ளது. உதாரணமாக இராமன் கடவுள் விஸ்னுவின் அவதாரமாக அடையாளப்படுத்தப்படுதல், அனுமன் தெய்வீக அம்சங்கள் கொண்டவராக சித்தரிக்கப்படுதல், இராவணன் மாயாஜாலங்கள் புரியும் அரக்கனாக சித்தரிக்கப்படுதல், அனுமன் பல்வேறு அளவுகளில் பரிணமித்தல், இராவணனின் புஸ்பக விமானம் முதலானவற்றை குறிப்பிடலாம். இந்த புரிந்துணர்வுடன் பண்டைய கதைகள் எவ்வாறு சமகால மனித வாழ்க்கைக்கு பங்களிப்பு செய்பவையாக உள்ளன என்ற அடிப்படையில் றோல்லோ மேயின் கோட்பாட்டுக்கு இணங்க இராமாயணத்தை ஒரு புராணம் என்ற நோக்கில் அணுகி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் புராணங்களுக்கான தேடல் நூலில் றோல்றோ மே இலியட், ஒடிசி போன்ற காவியங்களையும் புராணங்கள் என்ற அளவில் அணுகியிருப்பதும் இந்த அணுகுமுறை மேற்கொள்ளப்படுவதற்கு முன்மாதிரியாக கொள்ளப்பட்டுள்ளது.

றோல்லோ மே (1909–1994) இருத்தலிய உளவியல் ஆற்றுப்படுத்தலில் (existential psychology, counselling) முன்னோடியான சிந்தனையாளராவார். இருத்தலிய உளவியல் என்பது மனிதனின் வாழ்க்கை அனுபவம், சுதந்திரம், மற்றும் வாழ்க்கையின் அர்த்தத்திற்கான தேடலை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதும் அணுகுமுறையாகும். சோரன் கீர்க்கார்ட், பிரடரிக் நீட்சே, மற்றும் மார்டின் ஹைடெக்கர் போன்ற இருத்தலிய தத்துவவாதிகளின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு, மே மனித வாழ்வின் அடிப்படைச் சிக்கல்களை அணுகும் ஒரு தனித்துவமான உளவியல் கட்டமைப்பை உருவாக்கியுள்ளார் (பிரகாசன், 2025: 186). அவர் முன்வைத்த முக்கியக் கோட்பாடுகளில் ஒன்று 'புராணங்கள் வெறும் கதைகளாக இல்லாமல் மனித இருப்பை புரிந்துகொள்வதற்கும் வாழ்க்கையின் அர்த்தத்தை தேடுவதற்கும் அத்தியாவசியமான கருவிகளாக உள்ளன' என்பதாகும். இந்த ஆய்வுக்கட்டுரை மேயின் பின்வரும் முக்கிய எண்ணக்கருக்களான புராணமும் அர்த்தமும், இருத்தலிய பதகளிப்பும் தைரியமும், மாதிரிப்பொதுவுருக்களும் அடையாளக் குறியீடுகளும், நவீனத்துடன் புராணங்களின் தொடர்பு ஆகியவற்றினை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் சுந்தரகாண்டத்தை உளவியல் பகுப்பாய்வுக்கு உள்ளாக்குகின்றது.

நவீன சமூகத்தில் மனிதர்கள் 'புராணவியல் வெற்றிடம்' என்ற விடயத்தினால் துன்பத்தை எதிர்கொள்பவர்களாக உள்ளார்கள் என்ற கருத்தினை சமகால மனிதவாழ்க்கை தொடர்பான உளவியல் புரிதலுடன் றோல்லோ மே முன்வைத்துள்ளார். பாரம்பரியமான புராணங்களது சிதைவும், விஞ்ஞான பகுத்தறிவுவாத சிந்தனையின் எழுச்சியும் மனிதர்கள் வாழ்க்கையின் ஆழமான அர்த்தத்தை உணராது, இறுதியான இலக்கு என்ன என்ற புரிதல் இல்லாது எதேச்சையான, அலைபாய்கின்ற வாழ்க்கை

வாழ்வதற்குரிய சூழ்நிலையினை உருவாக்கியுள்ளது. இதுவே புராணவியல் வெற்றிடம் எனப்படுகின்றது. இந்த வெற்றிடமே பல்வேறு நவீன இருப்பியல் முரண்பாடுகளுக்கு காரணமாக உள்ளது. அந்நியமாதல், பதகளிப்பு, விரக்தி என்பன இவற்றில் சிலவாக உள்ளன.

இருப்பியல் வெற்றிடம் என்பதனை கலாசார, உளவியல் ஏழ்மை அல்லது குறைபாட்டு நிலை என்றும் புரிந்துகொள்ள முடியும். இதில் மனிதர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் அர்த்தங்களையும், வழிகாட்டல்களையும் வழங்கிய புராணங்களிலிருந்து துண்டிக்கப்பட்டவர்களாக வாழ்கின்றனர். புராணவிளக்கங்கள் இல்லாத மனிதர்கள் தங்களது அடையாளம், இலக்கு என்பவற்றினை சரியாக காண முடியாதவர்களாக வெறுமையுணர்விற்கும், கவனச்சிதைவிற்கும் வாய்ப்பினை பெறுகின்றனர். சுந்தரகாண்டம் முன்வைக்கும் விளக்கங்கள் கவனச்சிதைவு, தனிமையில் வெறுமையுணர்வு, நம்பிக்கையீனம் என்பவற்றிலிருந்து நீங்கி நல்வாழ்வு பெறுவதற்குரிய வாய்ப்பினை வழங்குகின்றன.

இவ்வாறு றோல்லோ மே மரபார்ந்த தொன்மங்களது அவசியத்தை வலியுறுத்துகின்ற அதேவேளையில் சமகால சமூக யதார்த்தங்களை பிரதிபலிக்கின்ற புதிய புராணங்களது அவசியம் பற்றியும் பதிவுகளை மேற்கொண்டுள்ளார். தனிநபர்கள் தங்களது தனித்துவமான அனுபவங்கள், கருத்துக்கள் என்பவற்றினை வரையறை செய்து சொந்த புராணங்களாக வடிவமைத்து தங்களது வாழ்க்கையினை நிர்ணயிப்பு செய்கின்ற இயலுமையினைக் கொண்டவர்களாக உள்ளனர் என்பது இது தொடர்பில் முன்வைக்கப்படும் நியாயப்படுத்தலாக உள்ளது.

**சுந்தரகாண்டத்தின் இருத்தலிய ஆற்றுப்படுத்தல், வழிகாட்டல் பண்புக்கூறுகள் - பகுப்பாய்வு**

சுந்தரகாண்டத்தை இருத்தலிய நோக்கில் மூன்று பிரிவுகளாக பகுப்பாய்வுக்கு உள்ளாக்கப்படக்கூடியதாக உள்ளது. அவை முறையே; முதலாவது அனுமன் கடலை தாண்டுதல் சீதையை தேடுதல் என்பவற்றுடன்; தொடர்புடைய விடயங்கள், இரண்டாவது சீதையை கண்டறிந்து உரையாடுவதுடன் தொடர்புடைய விடயங்கள், மூன்றாவது இராவண படைகளுடன் யுத்தம் செய்தல் இராமனிடம் திரும்புவதுடன் தொடர்புடைய விடயங்கள் என்பனவாகும்.

- **அனுமனின் கடல் தாண்டுகையும் சீதையை தேடுதலும்**

இந்த காண்டத்தின் நாயகனாக சித்தரிக்கப்பட்டுள்ள அனுமன் ஒரு மாதிரிப்பொதுவுருவாக நோக்கப்படக்கூடியவராக உள்ளார். இலங்கைக்கு சென்று சீதையினை தேடுகின்ற முயற்சியில் யார் ஈடுபடுவது என்ற விவாதம் இடம்பெறுகின்றபோது அவர் தன்னுடைய இயலுமையினை உணராத நிலையில் மௌனமாகவே உள்ளார். இதன்போது ஜாம்பவான் எனும் ஞானி அவருடைய இயலுமையினை எடுத்துக்கூறி குறித்த காரியத்தை மேற்கொள்வதற்கு பொருத்தமான நபர் அவரே என்பதனை உணரச்செய்கின்றார். மன்னன் சுக்ரீவனால் வழங்கப்பட்ட பொறுப்பினை உணர்ந்திருந்த அனுமன் அதனை நிறைவேற்றுவதற்கு தனக்கு வேண்டிய இயலுமை பற்றி அறியாது எவ்வாறு தன்னுடைய பங்களிப்பை மேற்கொள்ள முடியும் என்ற சுயசந்தேகத்தில், தவிப்புடன் இருந்த சந்தர்ப்பத்திலேயே ஜாம்பவானின் தலையீடு இடம்பெற்றுள்ளது. ‘அறிவார்ந்தமான வழிகாட்டல்’ தேவையான இடத்தில் அவசியமாக உள்ளமை இங்கு உணரச்செய்யப்படுகின்றது. ஒரு செயலை மேற்கொள்வதற்கு பொருத்தமான நபர் அதனை உணராது இருக்கின்றபோது சரியான அணுகுமுறையினை மேற்கொண்டு (அனுமனின் பிறப்பு, இயலுமைகள், கடந்கால சாதனைகள்) ஊக்குவித்து தன்நம்பிகையுடன் செயற்படுத்துவதன் அவசியம் சமகால மனிதர்களுக்கு முதலாவது

படிப்பினையாக உள்ளது. ஆற்றுப்படுத்தல் செயற்பாட்டில் தனிநபர்கள் பதகளிப்பு, இருப்பியல் சவால்களை எதிர்கொண்டு பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு தயங்கிய நிலையில் பின்தங்கியிருக்கின்றபோது ஆற்றுப்படுத்துநர் அவர்களது இயலுமையினை அறிந்து சுதந்திரத்துடனும், பொறுப்புணர்வுடனும் செயற்படுவதற்குரிய வாய்ப்பினை உருவாக்குகின்றமை இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாக உள்ளது.

இலங்கையை சென்றடைவதற்காக அனுமனின் கடல் தாவுகை நிகழ்வு புலப்படாத, ஊகிக்கமுடியாத சவால்களை நிகழ்கின்றபோது எதிர்கொள்ளலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கான ஒரு உருவகமாக நோக்கப்பட முடியும். இதற்கு தன்னுடைய திறன்களில் போதுமான நம்பிக்கையினை கொண்டிருக்கின்ற அதேவேளையில் சுமத்தப்பட்ட கடமையினை பொறுப்புணர்வுடன் நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணமும் இருப்பது நிபந்தனையாக உள்ளது. கடல் பயணத்தின்போது மூன்று முக்கிய நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

- முதலாவது மைநாக மலை அவர் தங்கி இழைப்பாறுவதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது *(சு.கா: 1.110-130)*. ஆனால் தன்னுடைய குறிக்கோளில் கவனத்தை செலுத்தியிருந்த அனுமன் அதனை தயவுடன் மறுத்து, நன்றி தெரிவித்து பயணத்தை தொடர்ந்துள்ளார். இவ் விடயம் இலக்குநோக்கிய பயணத்தில் உள்ள ஒருவர் வாழ்க்கையில் தற்காலிகமாக கிடைக்கின்ற சௌகர்யங்களினால் கவனச்சிதறலுக்கு உள்ளாகக்கூடாது என்பதனையும், கடமையினை உரிய காலத்தில் நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்பதனையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. அதில் தங்கியிருப்பதற்கு சுதந்திரம் இருந்தது எனினும் கடமையில் இருந்த பொறுப்புணர்வு அதற்கு அனுமதிக்கவில்லை. இது நவீன மனிதர்கள் தங்களது சுதந்திரத்தையும், பொறுப்புணர்வையும் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்கான ஒரு செய்தியாக உள்ளது.
- இரண்டாவது நாகதேவதை சுரசையினை எதிர்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் ஏற்படுகின்றது. சுரசை அனுமனை தன்னுடைய வாய்க்குள் வரவேண்டும் *(சு.கா: 1.150)* என்று கேட்டபோது ஆக்கத்திறனான வகையில் அவர் தனது உடலை முதலில் பெரிதாக்கி பின்னர் சிறிதாக்கி வாயின் உள்ளே சென்று உடனடியாக வெளியேறியமை சவால்களை சாதுர்யமான வகையில் கையாள்வதற்கு உள்ள திறமையின் வெளிப்பாடாக உள்ளது. வீண் முரண்பாடுகளை ஏற்படுத்தி காலத்தை வீணாக்காது இலக்குநோக்கி விரைந்து செயற்படுகின்ற பொறுப்புணர்வாகவும் நோக்கக்கூடியதாக உள்ளது. இது சில சவால்கள் நெகிழ்வுத்தன்மையுடனும், நுட்பமாகவும் கையாளப்பட வேண்டும் என்ற குறியீட்டினை நவீனகால மனிதர்களுக்கு வழங்குவதாக உள்ளது. வழங்கப்பட்டுள்ள காலம் குறைவாக உள்ள காரணத்தினால் அநாவசியமான விடயங்களில் கவனச்சிதறல்களுக்கு உள்ளாகாது விரைந்து காரியங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற இருத்தலிய வழிகாட்டலையும் முன்வைப்பதாக உள்ளது.
- மூன்றாவது சிம்கிகை எனும் அரக்கி அனுமனுடைய நிழலை இழுத்து தகரவிடாமல் தடுத்து உணவாக்க முயன்றபோது அவளது வாயினுள்ளே சென்று உடலைக்கிழித்து வெளியேறி *(சு.கா: 1.185)* தன்னுடைய பணத்தை தொடர்ந்தமை அமைந்துள்ளது. இது தவிர்க்கமுடியாத ஆபத்துக்கள் எதிர்கொள்ளப்படும்போது முழுமையான பலப்பிரயோகம் ஒன்றே அதனை எதிர்கொள்வதற்கான வழியாகும் என்பதனை காட்டுகின்றது. இதன் ஒரு பகுதியாகவே சுந்தரகாண்டத்தில் தைரியம், தொலைநோக்குத்திறன், உடனடியாக முடிவெடுக்கும் திறன், தீர்மானங்களை நிறைவேற்றும் செயற்திறன் ஆகிய நான்கும் எவரிடம் உள்ளதோ அவர்கள் காரியங்களில் தோற்று வருத்தம் அடைய மாட்டார்' என்ற பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது *(சு.கா: 1.98)*.

இலங்கையை சென்றடைந்த அனுமனுக்கு ஏற்பட்ட முதலாவது சவால் காவல் தெய்வமாக செயற்பட்ட லங்கினியை மிதமான பலப்பிரயோகத்தினுடாக எதிர்கொண்டமையாகும் (சு.கா: 3.40). அடைவதற்குரிய இலக்கின் அருகில் சென்ற பின்னர் ஏற்படக்கூடிய இடையூறுகள் பதகளிப்பினை ஏற்படுத்தக்கூடியவையாகும். எத்தகைய ஆபத்துக்கள் நிறைந்துள்ளன என்று அறியாத ஒரு செயற்பாட்டில் முழுமையான தடையாக எதிர்கொள்ளப்படுகின்ற விடயம் தவிர்க்கப்பட முடியாததாக உள்ளபோது அதனை நேருக்கு நேர் எதிர்கொள்கின்ற மனவலிமை இங்கு குறியீடாக்கப்பட்டுள்ளது. கடல்தாவுகையின்போது மைநாகமலையினை அன்பினாலும், சுரசையினை சாதுர்யமாகவும் கையாண்ட அனுமன் சிம்கிகையையும் லங்கினியையும் பலப்பிரயோகம் செய்து முறியடிப்பு செய்வதாக அமைக்கப்படுவது சூழ்நிலையின் தன்மையினை கருத்தில்கொண்டு காரியங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை வெளிப்படுத்துகின்றது. சுரசை இராவணனுடைய ஆளுகைக்கு உட்பட்ட ஒருத்தி அல்ல என்பதனால் அவள் வன்முறையற்ற வகையிலும், சிம்கிகையும் லங்கினியும் முழுமையான எதிரிகள், பூரணமான தடைகளாக இருந்தனர் என்பதனால் பலப்பிரயோகத்தினாலும் வெற்றிகொள்ளப்பட்டுள்ளனர். இவ் விடயங்கள் சவால்களின் இயல்பினைப்பொருத்து தேவைக்கு இணங்க ஒன்றில் அன்பினால் அல்லது நெகிழ்வுத்தன்மையுடன் அல்லது பலத்துடன் என பொருத்தமான முறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்ற செய்தியினை குறியீடான நவீனகால மனிதர்களுக்கு வழங்குகின்றன என்று குறிப்பிட முடியும்.

இலங்கையின் பல இடங்களிலும் தேடிய அனுமன் இராவணின் மாளிகைக்குள் நுழைந்தபோது எண்ணற்ற பேரழகுப் பெண்கள் தூங்கிக்கொண்டிருப்பதை மிகவும் அருகில் சென்று ஒவ்வொருவராக இதுதான் சீதையாக இருக்குமோ என்று தேடிப்பார்க்கின்றார். இதன்போது 'அந்தப் பெண்களை உற்று நோக்கியதால் தன்னுடைய பிரம்மசரிய தர்மத்துக்கு குறைவு வந்துவிடாதோ? என்ற ஐயத்தினால் பெரும் கவலைக்கு உள்ளாகியுள்ளார் (சு.கா.11.38-39). அதேவேளை தன்னுடைய செயற்பாடு உளரீதியாக ஏதேனும் மாற்றத்தை ஏற்படுத்தியதா என்று எண்ணிப்பார்க்கும்போது 'என் மனதில் எந்த விகாரமும் ஏற்படவில்லை, என் மனம் சஞ்சலமில்லாது நிலையாக இருக்கின்றது, பெண்களை பெண்கள் இருக்குமிடத்தில்தானே தேடிப்பார்க்க வேண்டும்' (சு.கா. 11.41-44) என்று தன்னை தேற்றிக்கொள்கின்றார். அனுமனின் இச் செயற்பாடு சுய-பிரதிபலிப்பு எனும் இருத்தலிய அணுகுமுறைகளில் ஒன்றாக உள்ளது. ஒருவர் தன்னுடைய செயற்பாடு தான் பின்பற்றுகின்ற ஒழுக்க நெறிகளுக்கு இசைவாக உள்ளனவா என்று சுயபரிசோதனை செய்துகொள்வதான இது நல்நெறியில் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டிய ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய நுட்பமாக உள்ளது.

இவ்வாறு பல்வேறு இடங்களில் தேடியும் சீதையை கண்டறியமுடியாத நிலையில் களைப்புற்று அமர்ந்துவிடுகின்ற அனுமன் இவ்வளவு நேரம் தேடியும் தான் இலக்கினை அடையவில்லை என்ற சிந்தனையில் ஒருவேளை சீதையை கண்டறியமுடியாது போய்விட்டால் தான் இதுவரை மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் அர்த்தமில்லாது போய்விடும், தான் மகிழ்ச்சியான செய்தியை கொண்டுசெல்லாவிட்டால் தன்னுடைய செய்திக்காக காத்திருப்பவர்கள் எத்தகைய பிரச்சினைகளை எதிர்கொள்வார்கள் என்ற சிந்தனைகளினால் மனக்கலக்கத்திற்குள்ளாகின்றார் (சு.கா: 12.7-10, 13.20-33), தன்னையே மாய்த்துக்கொள்ளலாம் என்றும் (சு.கா: 13.41), இதெற்கெல்லாம் காரணமான இராவணனை கொன்றுவிடலாமா என்றும் (சு.கா: 13.49) சிந்திக்கின்றார். இது றோல்லோ மேயின் சொல்லாடலில் இருத்தலிய பதகளிப்பு எனப்படுகின்றது. ஒருவர் தன்னுடைய செயற்பாடுகள் எதிர்பார்த்தவிளைவினை தராது, விளைவுகள் பாதகமாக அமைந்துவிடலாம், மற்றவர்கள் முன்நிலையில் எத்தகைய பதிலை

*கூறுவது என்ற பிரச்சினை எழலாம் என்று கருதிக்கொள்கின்றபோது ஏற்படுவதே இந்த நிலையாகும். இது ஒருவர் ஆரோக்கியமாக செயற்படுவதற்கு தடையினை ஏற்படுத்தி அமிழ்த்திவிடக்கூடியதாகும். ஆனால் என்னவானாலும் கடமையினை மேற்கொள்வதே தற்போது செய்யக்கூடிய செயல் என்று தன்னைத்தானே தேற்றிக்கொண்டு, தேடலை தொடர்கின்றார். இது சமகால உலகில் தங்களுக்கான இலக்குகளை நிர்ணயித்து செயற்படுகின்ற மனிதர்கள் அவற்றினை அடைந்துகொள்வதற்கு தவறுகின்றபோது, காலதாமதமாகின்றபோது எதிர்கொள்ளக்கூடிய மனச்சோர்வு, தோற்றுவிடுவோமோ என்ற சிந்தனை, தோல்விக்கு காரணமானவர்களை பலிவாங்க வேண்டும் என்ற சிந்தனை, அதனுடன் இணைந்த பதகளிப்பு என்பவற்றிற்கு இணையாக நோக்க முடியும். றோல்லோ மேயின் நோக்கில் பொறுப்புணர்வுடன் செயற்படுகின்ற ஒருவர் நிச்சயமற்ற சூழ்நிலைகளை எதிர்கொள்கின்றபோது உருவாகின்ற இத்தகைய பதகளிப்பு இயல்பான ஒன்றாகும். இது சரியாக கைளாயப்படுகின்றபோது தொடர்ந்து மாறுபட்ட அணுமுறைகளை கையாண்டு இலக்கினை நோக்கி முன்னேறுவதற்கான வாய்ப்பு உருவாக்கப்படுகின்றது.*

- ***சீதையை கண்டறிதலும் உரையாடுதலும்***

*இந்த தேடலின் தொடர்ச்சியில் இறுதியாக சீதையை அசோகவனத்தில் கண்டறிகின்றார். ஆனால் உடனடியாக அணுகமுடியாத நிலையில் காவல் வைக்கப்பட்டிருந்தார். இந்த சந்தர்ப்பத்தில் அனுமானுக்கு இரண்டு சவால்கள் இருந்தன. முதலாவது காவலர்கள் அறியாத வகையில் சீதையினை அணுகுவது, இரண்டாவது தான் இராமனிடமிருந்து வந்துள்ளேன் என்பதனை சீதை நம்பச்செய்வது. இரண்டும் ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் தெளிவற்றவையாகும். எதிர்மறையான விளைவுகள் ஏற்படின் இதுவரை அடைந்த வெற்றிகள் அனைத்தும் பாதகமாகப்போகக்கூடிய நிலையாகும். இவ்வாறான ஒரு நிலையில் அதாவது எதிர்காலத்தில் எத்தகைய ஒரு விளைவு ஏற்படும், பாதகமான நிலை உருவானால் இதுவரை மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் வீணாகிப்போகும் என்ற உணர்தலின் அடிப்படையிலும் இருத்தலிய பதகளிப்பு ஏற்படுகின்றது. அனுமனும் அத்தகைய பதகளிப்பினை எதிர்கொள்கின்றார். இந்த சந்தர்ப்பத்தில் அவருடைய நிதானித்த அணுகுமுறை உயர்வான பொறுப்புணர்வுடன் கூடிய நடத்தையினை வெளிப்படுத்துகின்றது. அதில் ஏற்கனவே ஏற்றுக்கொண்டிருந்த இராமன் குறித்த கடமையினை நிறைவேற்றுவது, மற்றும் அதில் ஒரு அங்கமாக சீதையின் நலனை பாதுகாப்பது என்பனவாகும் (சு.கா: 30). கடத்தப்பட்டு, சிறைவைக்கப்பட்டுள்ள சீதையின் மனநிலையினை உணர்ந்துகொண்டு அவதானமாக செயற்பட்டுள்ளமை அனுமானின் நிஜமான, போலித்தன்மையற்ற விசுவாசத்தையும், பொறுப்புணர்வையும் வெளிப்படுத்துகின்றன. சீதையின் பாதுகாப்புடன் சேர்த்து உணர்வுகளையும் பாதுகாப்பதற்காக அவதானத்துடன் செயற்பட்டமையானது அவர் தன்னுடைய கடமைக்கும், பெறுமானங்களுக்கும் உண்மையானவராக வெளிப்புற அழுத்தங்களுக்கு மத்தியில் உள்ளார்ந்த அமைதியுடன் சூழ்நிலையினை எவ்வாறு கையாளலாம் என்று நிதானித்து செயற்பட்டுள்ளமையினை வெளிக்காட்டுகின்றது. இவை அனைத்தும் சூழ்நிலையின் கைதிகளாக உணர்ச்சிப்பெருக்கினால் இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய நவீன மனிதர்கள் மனதில் இருத்தி தங்களது உணர்வுகளையும், சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் நெறிப்படுத்துவதற்கான எடுத்துக்காட்டுக்களாக உள்ளன.*

*இத்தனை துன்பங்களுக்கு மத்தியிலும் அவள் இராவனை, உண்மையில் அத்தகைய துன்பத்தை ஏற்படுத்தியது அவனாகவே உள்ள நிலையிலும், நிந்தைக்குள்ளாக்காது நிதானித்து செயற்படுகின்ற தன்மையினையும் அவதானிக்க முடிகின்றது. தன்னை இராமனிடம் மீளஒப்படைத்து அவருடன்*

நட்பினை *(சு.கா. 21:19)* ஏற்படுத்திக்கொள்ளும்படி அறிவுரை வழங்குவதானது இராவணன் தவறு செய்திருப்பினும் அவன் ஒரு அரசன் என்ற அந்தஸ்தினை வழங்கி நிதானமாக, பெருந்தன்மையாக கூறப்பட்ட வார்த்தைகளாக அமைந்துள்ளன. மேலும் இராவணன் செய்த தவறுக்காக அவனுடைய உறவினர்களும், ஒட்டுமொத்த இலங்கையும் அழிவுக்குள்ளாகக்கூடாது என்ற சிந்தனையின் வெளிப்பாடாகவும் நோக்கத்தக்கது. துன்பம் ஏற்படுத்திய எதிரி திருந்துவதற்கு தயாராக உள்ளபோது அவனை நண்பனாக ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கும் பக்குவம் இங்கு கற்றுக்கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது.

சீதையின் நம்பிக்கையினை பெறுவதற்காக இராம கீர்த்தனையை பாடுவதும் *(சு.கா: 31)*, பின்னர் அவதானமாக அணுகி தன்னை வெளிப்படுத்துவம், ஆதாரங்களை வழங்குவதும் மிகப்பெரும் பராக்கிரமசாலியும் அவசியமான சந்தர்ப்பத்தில் எளிமையாக செயற்பட வேண்டியதன் அவசியத்தை முன்நிலைப்படுத்துகின்றது. சீதையின் இடத்தில் தன்னை இருத்தி அவளது மனநிலையினை புரிந்துகொண்ட இந்த அணுகுமுறையானது அனுமனின் உளவியல் உத்தியாக உள்ளது. ஏற்கனவே துன்பத்திற்கு உள்ளாகியுள்ள சீதையினை மேலும் காயப்படுத்தாது, உளமிரட்சியை ஏற்படுத்தாது கவனமாக செயற்பட்டுள்ளார். மிகப்பெரும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ள ஒருவர் அதனை நிறைவேற்றி முடிப்பதற்காக தன்னுடைய அனைத்து இயலுமைகளையும் பயன்படுத்த வேண்டும் என்று நவீன மனிதர்களுக்கான பாடமாக இது அமைந்துள்ளது. அனுமனின் இலங்கை வருகையின் நோக்கம் சீதையின் இருப்பிடத்தை கண்டறிவதாக இருந்தது. ஆனால் சீதையின் இருப்பினை அறிந்த பின்னர் அவர் உடனடியாக இராமனிம் செல்வதாக அமைக்கப்படாது சீதைக்கு ஆறுதலை ஏற்படுத்தி, நம்பிக்கையூட்டி செல்வதாக அமைக்கப்பட்டுள்ளது *(சு.கா: 35:29-35, 35:79, 36:39, 40:44-54)*. இவ் விடயம் தைரியம், வீரம், நீதி, விசுவாசம், விவேகம் என்ற பெறுமானங்களுடன் இணைத்து அன்பு, பாசம், உடனிருத்தல், பச்சாதாபம் என்ற பெறுமானங்களையும் முன்நிலைப்படுத்துவதாக உள்ளது. இவ்விடயம் இராமாயனம் ஒரு புராணம் என்ற அளவில் எவ்வாறு மனிதவாழ்க்கையுடன் தொடர்புடைய அனைத்து அகநிலை அம்சங்களையும் உள்ளடக்கியதாக ஒரு வாழ்வியல் வழிகாட்டலாக உள்ளது என்பதற்கு இன்னுமொரு ஆதாரமாக கொள்ளத்தக்கதாகும்.

இந்த சந்தர்ப்பத்தில் சீதையுடன் தொடர்புபட்ட இருத்தலிய, உளவியல் அம்சங்கள் கவனத்திற்குரியவையாக உள்ளன. வழக்கமான வாழிடத்திலிருந்தும், அன்பான உறவுகளிலிருந்தும் தனிமைப்படுத்தப்பட்டு, அந்நியமான ஒரு சூழலில் ஒரு புதிய விடயத்தை ஏற்றுக்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் சீதையின் நிலை அமைக்கப்பட்டுள்ளது *(சு.கா. 22, 23, 27)*. அனுமனை காண்பதற்கு முன்னர் அவள் மீட்சி பெறுவதற்கான எந்தவொரு உறுதியான ஆதாரங்களும் இருக்கவில்லை. ஏற்கனவே வனவாசத்தில் சவால்களை எதிர்கொண்டிருந்த சீதைக்கு அனைத்து துன்பங்களிலிருந்தும் நீங்கி புதிய அடையாளத்தை பெற்றுக்கொள்வதற்குரிய, வாழ்க்கையினை அமைத்துக்கொள்வதற்குரிய வாய்ப்பே இராவணனால் வழங்கப்பட்டிருந்தது. உண்மையில் சௌகர்யமான, உல்லாசமான ஒரு வாழ்க்கையினை தேர்ந்தெடுக்கும்படி அவள் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தாள் *(சு.கா. 24)*. இதன்போது சீதைக்கு இருந்தது எல்லாம் உண்மையான நல்வாழ்க்கை என்றால் என்ன என்று அவள் வாழ்க்கைக்கு கொடுத்திருந்த அர்த்தமும், அந்த அர்த்தம் தன்னுடைய கணவன் ஊடாக நிறைவேறும் என்று கொண்டிருந்த நம்பிக்கையுமேயாகும். இவ்வாறு சிதையின் தனிமை, அந்நியம், இழப்பு, பாதுகாப்பின்மை, துன்பம், ஏக்கம், நம்பிக்கை, அர்த்தத்திற்கான

*தேடல், மீள்எழுச்சித்திறன் என அனைத்தும் இருத்தலியம் குறிப்பிடுகின்ற மனிதர்கள் தவிர்க்க முடியாத அங்கங்களாக அமைந்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது.*

*மனித வாழ்க்கையில், குறிப்பாக துன்பங்கள் எதிர்கொள்ளப்படுகின்றபோது, ஏற்படுத்திக்கொள்கின்ற அர்த்தத்தில் நிலைத்திருப்பதற்கு நம்பிக்கை அடிப்படையான அம்சமாக உள்ளது என்பது றோல்லோ மேயினால் வலியுறுத்திக்கூறப்படுகின்றது. சீதை தன்னுடைய இலட்சியமான இராமனுடனான வாழ்க்கையில், அவனுடைய அன்பில், வீரத்தில், தர்மத்தில், தன்னுடைய குலப்பெருமையில் (சு.கா. 26.11) கொண்டிருந்த நம்பிக்கையே உளரீதியான இயலுமையினை வழங்கி அவளை துன்பங்களுக்கு மத்தியில் நிலைபெறச்செய்திருந்தது. இது தனிநபர்கள் அர்த்தங்களுடனும், நோக்கங்களுடனும் தங்களை இணைத்துக்கொள்வதனூடாக துன்பங்களுக்கு மத்தியில் நிலைத்திருக்க முடியும் என்ற இருத்தலிய உண்மைக்கு புராணவியல் ஆதாரமாக உள்ளது. மேலும் அனைத்து வகையிலும் புறத்தேயிருந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டபோதிலும் சீதை தான் இராமனின் மனைவி என்ற அடையாளத்தை பாதுகாப்பதற்கான மனவுறுதியினை கொண்டிருக்கின்றாள். 'வாழ்க்கை என்பது நிகழ்வுகளும் அதற்கான எதிர்வினைகளும்' என்ற இருத்தலிய சிந்தனை இங்கு கவனத்திற்குரியதாகின்றது. ஏனெனில் மனித வாழ்க்கையில் எந்தவொரு நிகழ்வும் எப்போது வேண்டுமானாலும் நிகழமுடியும், அதற்கு ஒருவர் எவ்வாறு எதிர்வினையாற்றுகின்றார் என்பதே அவருடைய வாழ்க்கையின் தன்மையினை நிர்ணயிக்கின்றது. சீதை தனக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கியமான நிகழ்வின்போது, அது நிலைபெற்றிருந்தபோது தன்னுடைய வாழ்க்கையின் இலட்சியத்தில், அடையாளத்தை பேணுவதில் உறுதியாக இருந்தமை 'துரதிர்ஸ்டத்தை அமைதியாக ஏற்றுக்கொண்டு பொருத்தமான காரியங்களை மேற்கொண்டு செயற்படுவதே அதனை அதிர்ஸ்டமாக மாற்றுவதற்கான வழியாகும்' என்ற சிந்தனையும் இங்கு இணைத்து நோக்கப்படுவதற்குரியதாயுள்ளது.*

*சீதையும், அனுமனும் சந்தித்துக்கொள்வதும், உரையாடுவதும் இருத்தலிய ஆற்றுப்படுத்தல் அணுகுமுறையின் அம்சங்களைக் கொண்டுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. தான் வாழ்கின்ற சூழலில் யாரையும் நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இல்லாத நிலையில் சீதை ஹனுமனை எதிர்கொண்டபோது அச்ச உணர்வும், நம்பிக்கையின்மையும் வெளிப்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் தன்னுடைய மீட்சிக்கு ஏதேனுமொரு வழி உருவாகும் என்ற நம்பிக்கையினை கொண்டிருந்தையி்னால் எச்சரிக்கையுணர்வுடன் தன்னுடைய சந்தேகங்களை தீர்த்துக்கொள்வதற்குரிய கேள்விகளை முன்வைத்து பதில்களினால் திருப்தியடைந்து, ஆதாரங்களை கண்ட பின்னரே ஹனுமனின் வார்த்தைகளை செவிமடுக்க தயாராகின்ற தன்மையினை அவதானிக்க முடிகின்றது. சீதையின் கேள்விகளுக்கு ஹனுமனின் பதில்கள் துன்பத்துக்குள்ளாகியிருக்கும் ஒருவருக்கு ஆறுதல் தரும் வகையில் இருந்தமையினை காணக்கூடியதாக உள்ளது. சீதையில் நிலையினை உணர்ந்து அதேவகையான துன்பத்தை இராமனும் அனுபவிக்கின்றார் என்பது முதற்கொண்டு சீதையினை மீட்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கின்றார் என்பது வரையில் சீதையின் துன்பத்தை போக்கி, நம்பிக்கையினை ஏற்படுத்தி வலுப்படுத்துவதற்கான அனைத்து உளவியல் அணுகுமுறைகளும் பிரயோகிக்கப்பட்டுள்ளன (சு.கா: 34, 35, 36). இவ் விடயங்கள் வெளிப்படையான உரையாடல்கள் எவ்வாறு நம்பிக்கையினை வளர்ப்பதற்கும், துன்பத்திலிருந்து மீட்சிபெறுவதற்கும் உதவுகின்றன என்பதனை உணரச்செய்பவையாக உள்ளன. குறிப்பாக போலித்தன்மையற்ற நிஜமான, அர்ப்பணிப்புடன் கூடிய மனித உறவுகள் எவ்வாறு இருப்பியல் சார்ந்த சவால்களிலிருந்து மீண்டு, துன்பங்களுக்கு மத்தியிலும் வாழ்க்கைக்கு அர்த்தத்தை வழங்கக்கூடியவையாக உள்ளன என்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. அன்பான உறவுகளுடனான*

தொடர்பும், நம்பிக்கையும் ஒரு மனிதனை மாற்றியமைக்கும் திறன்கொண்டவை என்பதும் இதனூடா அறிந்துகொள்ளப்பட வேண்டியதாகவுள்ளது.

இங்கு தன்னால் உடனடியாக சீதையை இராமனிடம் சேர்ப்பிக்க முடியும் என்று அனுமன் கூறுவதும் (சு.கா. 37:19-24), அதனை மறுத்து இராமன் வந்த தன்னை மீட்கும் வரையில் காத்திருப்பதாக சீதை கூறுவதும் கவனத்திற்குரிய முக்கியமானதொரு விடயமாக உள்ளது. இந்த முன்மொழிவினை அனுமன் மேற்கொண்டவை மதிப்பிற்குரிய தாயாக சீதையினை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் அவளது துன்பத்தை பொறுத்துக்கொள்ள முடியாத நிலையில் ஏற்பட்ட உளச்சங்கடத்தின் வெளிப்பாடாகும். தான் திரும்பிச்சென்ற பின்னர் சீதைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் எவ்வாறு இருக்குமோ என்ற அச்சம் ஏற்படுத்திய பதகளிப்பு அவருடைய கோரிக்கைக்கு காரணமாக இருந்தது என்று புரிந்துகொள்ள முடியும். இதன்படி அன்பும், பொறுப்புணர்வும் ஒன்றினைந்ததாகவே இந்த முன்மொழிவு அமைந்துள்ளது. ஆனால் அதனை சீதை மறுத்தது மறுப்பது அவளது சுயஅடையாளம், பொறுப்புணர்வு, கௌரவம், இராமனுடன் வாழ்ந்ததற்கான வாழ்க்கையின் அர்த்தம், நம்பிக்கை முதலானவற்றை உள்ளடக்கயதாக உள்ளது. துன்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு உடனடி வாய்ப்பு கிடைத்தது எனினும் மேற்குறித்த விடயங்களை கவனத்தில் கொண்டு தான் துன்பத்தை தாங்கிக்கொள்வேன், இராமன் வந்து தன்னை மீட்பதே அவருக்கு அழகு (சு.கா. 38:62) , 'சுதந்திரமாக சிந்தித்து ஒரு முடிவு எடுக்கக்கூடிய நிலையில் உள்ள தான் இன்னுமொருவருடன் பயணம் செய்வது தர்மம் அல்ல' (சு.கா.68:39) என்று கூறுவது, தன்னுடைய துன்பங்களுக்கு ஒரு அர்த்தம் கிடைக்கும் என வெளிப்படுத்துவது வாழ்க்கையின் ஒவ்வொரு செயற்பாடுகளும் பொறுப்புணர்வுடன் அர்த்தபூர்வமானதாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற இருத்தலிய வழிகாட்டுதலின் அடிப்படையில் உள்ளது. புறச்சூழ்நிலைகளின் அழுத்தம் எவ்வாறு இருந்தபோதிலும் ஒருவர் தன்னுடைய அடிப்படையான பெறுமானங்களை, நம்பிக்கைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பது இந்த குறியீட்டின் ஊடாக நவீனகால மனிதர்களுக்கு கடத்தப்படக்கூடிய பாடமாக உள்ளது. றோல்லோ மே குறிப்பிடுவதுபோன்று இருப்பியல் உறவுத்தொடர்பில் நல்ல உள்நோக்கங்களை மாத்திரம் வைத்து செயற்படுவது போதாது மாறாக பிரச்சினையுடன் இருப்பவரின் மனநிலையினை, மனப்பதிவுகளை, நோக்கங்களை ஆழமாக புரிந்துகொண்டு செயற்படுவதன் அவசியத்தை வெளிப்படுத்துகின்றது. ஹனுமனின் நோக்கம் தூய்மையானது எனினும் அவர் சீதை எதிர்கொண்டிருந்த பிரச்சினைகளினால் தானும் உளக்கலக்கத்திற்குள்ளாகியிருந்தமையின் ஒரு பகுதியாக வெளிப்பட்டு என்றும் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

சீதையின் மறுப்பினை புரிந்துகொள்கின்ற அனுமன், அதனை பணிவுடன் ஏற்றுக்கொள்கின்றார் (சு.கா. 38: 4-5). ஒருவரை உண்மையான கவனமெடுத்து உதவுவதும், பொறுப்புடன் நடந்துகொள்வதும் தன்னுடைய நோக்கங்களிலிருந்து மாறுபட்டதாக அவர்களுடைய நோக்கங்கள் இருக்கும்போது அந்த தெரிவுகளையும், அவற்றின் பின்னால் இருக்கக்கூடிய பெறுமானங்களையும் மதிப்பதிலேயே தங்கியுள்ளது என்ற இருப்பியல் வழிகாட்டல் இங்கு பின்பற்றப்பட்டுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. சில பிரச்சினைகளுக்கு உடனடியான தீர்வுகள் பெறக்கூடியவையாக இருப்பினும் அவை முழுமையான நோக்கில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கில்லை என்பதனையும் இதனூடாக புரிந்துகொள்ள முடிகின்றது. துன்பங்களின் உளவியல் பரிமாணம், அதற்கு தீர்வாக உரியநபர் எதிர்பார்க்கின்ற தீர்வு என்பன சரியாக புரிந்துகொள்ளப்பட்ட பின்னரே இரண்டாவது நபர் தன்னுடைய தலையீட்டை மேற்கொள்ள வேண்டும் என்பதும் தீர்வு என்பது தலையீடு செய்பவரினால் திணிக்கப்படாது, உரியவர்களினால் மேற்கொள்ளப்படுவதற்கு, கண்டறியப்படுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்

*என்பதும் இங்கு புரிந்துகொள்ளப்பட வேண்டியதாக உள்ளது. சீதையின் சுயாதீனத்தையும், இருப்பியல் சுதந்திரத்தையும் அங்கீகரிக்கின்ற அனுமான் தன்னுடைய புரிந்துணர்வில் அடுத்தநிலை வளர்ச்சியை பெறுகின்றார், இராமனிடம் திருப்பிச்செல்வதற்காக சீதையிடமிருந்து பணிவுடன் அனுமதியை பெற்றுக்கொள்கின்றார்.*

- **இராவணன் படைகளுடன் யுத்தம் செய்தல், இராமனிடம் திரும்புதல்**

*இதன் பின்னர் அசோகவனத்தை அழித்தலும் இராவண சேனைகளுடன் யுத்தம் செய்தலும், இராவணனை அரசவையில் எதிர்கொள்தல், இலங்கையை எரித்த பின்னர் இராமனிடம் திரும்புதல் எனும் மூன்று பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. சீதையை கண்டறியும் பயணத்தில் அனுமன் பூரண சுதந்திரம் கொண்டவராக உள்ளார். சீதை அசோகவனத்தில் எதிர்கொண்டிருந்த துன்பங்களை கண்டறிந்த அவர் அதற்கு காரணமாக இராவணன் தொடர்பில் கோபம் கொள்வது இயல்பானதே. இதனால் தனக்கிருந்த சுதந்திரத்தை பொறுப்புணர்வுடன் பயன்படுத்தி தன்னுடைய இயல்பான திறன்களுக்கு உகந்த வகையில் மேற்கொண்ட செயற்பாடுகளாகவே இவை அமைந்துள்ளன. சீதையை மீட்கும் முயற்சியில் முதல் படியாக இராணவனை எதிர்த்து அவனுடைய இறுதியான நிலைப்பாடு என்னவாக உள்ளது, அவனுடைய ஆற்றல் எவ்வளவாக உள்ளது என்று அறிந்துகொள்ள வேண்டும் (சு.கா. 41:9) என்பதற்காக முயற்சியாகவே இராவண படைகளை எதிர்ப்பதற்கு தீர்மானித்துள்ளார். இதன் தொடர்ச்சியாக இராவணனை அவனுடைய சபையில் எதிர்கொண்டு தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட பின்னர் அயலவர் மனைவியை அபகரித்துக்கொண்டு வந்து வைத்திருப்பது தர்மத்தின் தத்துவம் அறிந்தவருக்கு உகந்ததல்ல, புத்திசாலிகள் தர்மத்திற்கு எதிரானதும், பெரிய ஆபத்துக்களுக்கு காரணமானதும், வேருடன் நாசம் செய்யக்கூடியதுமான செயல்களில் ஈடுபட மாட்டார்கள், எனவே ஏற்படப்போகும் நாசங்களை சிந்தித்துப்பாருங்கள் என பலவாறான அறிவுரைகளை முன்வைக்கின்றார் (சு.கா. 51:17-45).*

*எதிரியை தனியாக எதிர்கொள்வதற்குரிய தைரியம், எதிரிகளின் தலைவனை நேருக்கு நேர் எச்சரித்து அறிவுறுத்தும் ஞானம், தன்னில் பற்றவைத்தை தீயை பன்மடங்களாக எதிரிகளுக்கே திருப்பி வழங்கிய ஆக்கத்திறனான சிந்தனை என்பன ஆபத்துக்களால் முழுமையாக சூழப்பட்டு, வேறு உதவிகள் இல்லாத நிலையிலும் தன்னுடைய நிஜமான இயல்புக்கு இணங்க செயற்பட்ட இருப்பியல் நாயகனாக அனுமனை வெளிப்படுத்துகின்றன. இவை அனைத்திற்கும் மத்தியில் தனியொரு பிரதிநிதியாக அனுமன் மேற்கொண்ட செயற்பாடுகளின் பின்னரும் தன்னுடைய அகங்காரம், ஆசை என்பவற்ற்றினை தாண்டி உண்மையினை உணர்ந்துகொள்ளத்தவறிய நிலையில் இராவணனுடைய நிலை இருப்பியல் அறியாமை, சுய ஏமாற்றுகை கொண்டதாக உள்ளது. இங்கு அனுமனும், இராவணனும் முறையே சமகால மனிதர்கள் ஒருவர் நீதியான வழிமுறையில் செயற்படும்போது எவ்வாறு உறுதியான மனநிலையில் செயற்பட வேண்டும் என்பதனையும், அநீதியை பின்பற்றுகின்ற ஒருவர் எதிர்கொள்ளக்கூடிய விளைவுகளையும் வெளிக்காட்டுபவர்களாக உள்ளனர்.*

*இலங்கையில் இருந்து தான் புறப்பட்ட இடத்திற்கே திருப்பிச்சென்று 'கண்டேன் சீதையை' (சு.கா. 57:35) என்று ஆரம்பித்து நடந்த விடயங்களை ஏனைய வானரர்களுக்கு விளக்கிய பின்னர் இறுதியாக இராமனிடம் சென்றடைந்த அனுமன் மீண்டும் 'கண்டேன் சீதையை' (சு.கா.65:59) என்று கூறி அதற்கான ஆதாரங்களை சமர்ப்பித்து பக்தியுடன் அமைதியாக இருக்கின்ற நிகழ்வு பெறுமதியான ஒரு பொறுப்பினை ஏற்றுக்கொண்ட ஒருவர் எவ்வாறு அதனை நிறைவேற்றி முடித்து, இறுதி வெளிப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும், அதன் பின்னர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்*

என்பதற்கான வழிகாட்டலாக உள்ளது. அனுமன் எந்தவொரு பிரதிபலனையும் எதிர்பார்த்து மேற்கொண்ட செயற்பாடாக அல்லாமல் ஏற்றுக்கொண்ட கடமையினை, தன்னுடைய அரசனின் ஆணையினை நிறைவேற்றியதாகவே உள்ளது. அவை தன்னுடைய மக்களது நன்மைக்காக ஆட்சிமாற்றம் ஏற்படுவதற்கு பங்களிப்பு செய்த இராமனுடன் ஏற்படுத்திக்கொண்ட உறவின் அடிப்படையில் இருவரதும் பெறுமானங்கள், சுய-தேவைகள் பொதுமைத்தன்மை கொண்டவையாக இருந்தமையின் அடிப்படையில் மேற்கொண்ட உதவிகளாகவே நாம் நோக்க வேண்டும். இது பொது நன்மைக்காக எவ்வாறு தனிமனிதனொருவன் தன்னை அர்ப்பணித்து, முழுமையான ஈடுபாட்டுடன், வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை பொறுப்புணர்வுடன் பயன்படுத்தி காரியம் நிறைவேற்ற வேண்டும் என்று நவீன மனிதர்களுக்கான மிகப்பெரும் பாடம் ஒன்றினை கற்றுத்தருவதாக உள்ளது எனலாம். அனுமன் ஒரு இருப்பியல் நாயகனாக கடமையை நிறைவேற்றி முடித்தலே வாழ்க்கைக்கு இறுதியான அர்த்தத்தை வழங்குகின்றது என்ற அடிப்படையில் இங்கு செயற்பட்டுள்ளார் என்று நாம் குறிப்பிட முடியும்.

அதுபோல புராணங்கள் உளவியல் வளங்களாக மனிதர்கள் இருப்பியல் சிக்கல்களில் பயணிப்பதற்கு வழிகாட்டிகளாக பணியாற்றுகின்றன என்பது றோல்லோ மேயின் நம்பிக்கையாக உள்ளது. மேற்குறித்த அவதானங்களின் அடிப்படையில் சுந்தரகாண்டம் நவீனகால இருப்பியல் முரண்பாடுகளை எதிர்கொள்வதற்குரிய சரியான வழிகாட்டியாக உள்ளது என்பதனை உறுதிசெய்ய முடிகின்றது. குறிப்பாக நவீன மனிதர்கள் எதிர்கொள்ளும் முரண்பாடுகளில் ஒன்று அந்நியமாதல் என்பதாகும். உறவுகளில் தற்காலிகமாக ஏற்படும் விரிசல்கள்கூட நிரந்தரமான பிரிவுக்கு இட்டுச்செல்கின்றன. சுயத்தில் இருந்தே அந்நியமானதாக உணர்கின்ற மனிதர்களுக்கு ஏனைய மனிதர்களிடமிருந்தும், உலகிடமிருந்தும் அந்நியமாக தோன்றுவது இயல்பானதே. இங்கு இடத்தால் அந்நியமாக்கப்பட்ட நிலையில் இருப்பினும் சீதைக்கும், இராமனுக்கும் இடையில் இருந்த உளரீதியான தொடர்பு சமகால குடும்ப உறவுகளில் பின்பற்றப்படுவதற்குரியதொன்றாக உள்ளது. பரஸ்பர நம்பிக்கை, அன்பு, புரிந்துணர்வு என்பன இங்கு உறவுகளில் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது. இவர்கள் இருவருக்குமிடையிலான தொடர்பினை மீளஏற்படுத்தியதில் அனுமனின் செயற்பாடு எவ்வாறு ஒரு அர்ப்பணிப்புடன் கூடிய சேவையாக, கடமை நிறைவேற்றமாக மேற்கொள்ளப்பட்டது என்பதும் கவனத்திற்குரியதாகும். இராமன், சீதை, அனுமன் என்ற பாத்திர வடிவமைப்புக்கள் எந்தவொரு சிக்கலான, முரண்பாடான சூழ்நிலைகளிலும் உறவுகளை பேணுவதிலும், காப்பதிலுமே மனித வாழ்க்கையின் அர்த்தம் பொதிந்துள்ளது என்ற செய்தி வெளிப்படுத்தப்படுகின்றது.

**முடிவுரை**

சுந்தரகாண்டம் முதலான புராண வழிகாட்டல்களை நிராகரிப்பு செய்வது 'புராணவியல் வெற்றிடத்தை' உருவாக்கும், இந்த வெற்றிடம் நிரப்பப்படும். நுகர்வுக்கலாசாரம், வாழ்க்கை அர்த்தமற்றது என்ற உணர்வு *(nihilism)* முதலான மேலோட்டமான, எதிர்மறையான வழிகாட்டல்களினால் நிரப்பப்படுவதற்கு வாய்ப்புள்ளது. இந்த சிக்கல்நிலை புரிந்துகொள்ளப்பட்டு நவீன மனிதர்கள் தங்களை அர்த்தமுடைய வாழ்க்கைக்குள் நிலைப்படுத்திக்கொள்வது விரைந்து நிறைவேற்ற வேண்டியது அவசியமாக உள்ளது. விஞ்ஞான பகுத்தறிவுவாதம், பௌதீகசிந்தனைகள், சுயமுன்னுரிமைப்படுத்தல்கள் என்பவற்றினால் ஆளுகை செய்யப்படுகின்ற உலகில் மனிதர்களது ஆழமான உளவியல், இருப்பியல் தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய இயலுமையினை புராணங்கள் கொண்டுள்ளன என்பது றோல்லோ மேயின் வாதமாக உள்ளது. சிதைவு, அந்நியமாதல், இருத்தலிய உறுதியற்றதன்மை முதலானவற்றினால் நிறைந்துள்ள சமகால உலகில் அர்த்தம், நோக்கம், சுயஅடையாளம் என்பவற்றினால்

*ஒழுங்கமைக்கப்பட்ட வாழ்க்கையினை வாழ்வதற்கு சுந்தரகாண்டம் மிகவும் ஆரோக்கியமானதொரு பங்களிப்பினை வழங்குவதற்கான வளங்களைக் கொண்டிருப்பதனை அடையாளப்படுத்த முடிகின்றது. வாசிப்பவர்களிடையே நம்பிக்கை, பக்தி, கடமையுணர்வு, அன்பு, மீள்எழுச்சித்திறன் முதலானவற்றினை உருவாக்குகின்ற இயலுமை இதில் உட்பொதிந்துள்ளது. சமய வழிகாட்டல்கள், சமூக ஒருங்கினைவுகள் என்பனை புறக்கணிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இருப்பியல் வெற்றிடத்தில் வாழ்கின்ற ஒரு காலகட்டத்தில் பொருள்சார் நன்மைகளை, வெற்றிகளை தாண்டி அன்பும், கடமையும் ஒரு மனிதனுடைய வாழ்க்கைக்கு எவ்வாறு அர்த்தத்தை உருவாக்குகின்றன என்பதனை இதனூடாக அறிந்துகொள்ள முடிகின்றது.*

*இத்தகைய நோக்கில் சுந்தரகாண்டம் சோதனை, பதட்டம், நம்பிக்கை, பொறுப்புணர்வு, அன்பு முதலான உலகளாவிய மனித போராட்டங்கள் பற்றியும், அவற்றிலிருந்து வெளியேறி அர்த்தமுடையவாழ்க்கையினை வாழ்வதற்குமான வழிகாட்டல்களை உள்ளடக்கியதாக உள்ளமையினை உறுதிசெய்ய முடிகின்றது. இதனால் புராணங்களில் உள்ள புலன்கடந்த விபரிப்புக்களை சாத்தியமற்றவை என்று புறம்தள்ளாது அவற்றினை விமர்சனநோக்கில் அணுகி உட்பொதிந்துள்ள குறியீட்டு அர்த்தங்களை கட்டுடைப்பு செய்து விளங்கிக்கொள்வதன் ஊடாக சுய-ஆற்றுப்படுத்தலுக்கான, அதேவேளை பிறரை ஆற்றுப்படுத்துவதற்கான கருவிகளாக பயன்படுத்திக்கொள்வதற்கு முயற்சிப்பது காலத்தின் தேவையாக உள்ளது.*

**உசாத்துணைகள்**


- Campbell, J., & Moyers, B. (1988). *The power of myth*. Doubleday.
- Deekshitulu, P. V. B. (2017). Effects of Indian epics in psychotherapy. *American Journal of Clinical Research and Reviews, 1*(1), 1–6.
- Gairola, V., & Mishra, P. K. (2022). Bhagavad Gita and psychotherapy: A cure for soul? In S. K. Sia, L. S. Crane, A. K. Jain, & S. Bano (Eds.), *Understanding psychology in the context of relationship, community, workplace and culture*. Springer. https://doi.org/10.1007/978-981-19-2693-8_15
- Jacob, K. S., & Krishna, G. S. (2003). The Ramayana and psychotherapy. *Indian Journal of Psychiatry, 45*(4), 200–204.
- Jung, C. G. (1950). *Man and his symbols*. Arkana.
- Kurhade, C. S., Jagannathan, A., Varambally, S., Shivana, S., Sudhir, P., & Gangadhar, B. N. (2024). Development of a Ramayana-based counseling module for persons with common mental health disorders. *Indian Journal of Psychological Medicine*. https://doi.org/10.1177/02537176241245073
- May, R. (1975). *The courage to create*. W. W. Norton & Company.
- May, R. (1991). *The cry for myth*. W. W. Norton & Company.
- Mohanraj, V. S. (2016). *Sundarakandam – Valmiki Ramayan in Tamil*. https://archive.org/details/Sundarakandam-ValmikiRamayanInTamil/001-Sundar-Kand-Valmiki-Ramayan-in-Tamil/

- Oswal, N. (2012). Utility of popular stories to relieve distress: Perspectives of adult listeners. *Psychological Studies, 57*(1), 292–302. https://doi.org/10.1007/s12646-011-0131-9

- Prahasan, M. (2023). Features of individual counselling in the Bhagavat Gita: A philosophical perspective. *Mozithal, 10*(1), 52–74.

- Prahasan, M. (2025). *Phenomenology and existentialism: Theories and applications*. Chemamadu Publication.

- Reddy, M. S. (2012). Psychotherapy – Insights from Bhagavad Gita. *Indian Journal of Psychological Medicine, 34*(1), 100–105.

- Shamasundar, C. (1993). Therapeutic wisdom in Indian mythology. *American Journal of Psychotherapy, 47*(3), 443–450. https://doi.org/10.1176/appi.psychotherapy.1993.47.3.443

- Wig, N. N. (2004). Hanuman complex and its resolution: An illustration of psychotherapy from Indian mythology. *Indian Journal of Psychiatry, 46*, 25–28